மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

19.08.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# வரலாற்றில் மிக மோசமான சமூக பொருளாதார நெருக்கடியில் இலங்கை உள்ளது : ஐ.நா அறிக்கை



கடலரிப்பு காரணமாக அழிக்கப்படும் வளங்கள் (சகா தேவராஜா)

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நாட்டின் சுகாதார கட்டமைப்பினை வீழ்ச்சியின் இறுதிக்கட்டத்திற்கு இட்டுச்சென்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான சமூக–பொருளாதார நெருக்கடியின் மத்தியில் உள்ளதாகவும் கர்ப்பிணிப் பெண்களின் வாழ்வாதாரத்தை இந்த நிலை பாதித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் உபகரணங்கள், மருந்து பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 02

# மேலும் 25 மில்லியன் டொலரை வழங்கும் அவுஸ்திரேலியா

70வருடகாலவரலாற்றில்மோசமானபொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையின் அவசர உணவு மற்றும் மருந்துதேவைகளிற்கு உதவுவதற்காக 25 பில்லியன் டொலர்களை அவுஸ்திரேலியா வழங்கவுள்ளது. அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரும் சர்வதேச அபிவிருத்தி மற்றும் பசுபிக்கிற்கான அமைச்சரும் இணைந்து இதனை அறிவித்துள்ளனர்.

இந்த சவாலான தருணத்தில் அவுஸ்திரேலியா இலங்கை மக்களுடன் இணைந்திருக்கின்றது குறிப்பாக கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 02

## எரிபொருள் விநியோகம் இரத்து

12 எரிபொருள் நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. QR நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றாமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் 2021 இல் திருமணப் பதிவுகள் அதிகரிப்பு

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டில், இலங்கையில் திருமணப் பதிவுகள் அதிகரித்துள்ளன. 2020ஆம்ஆண்டு, ஒரு இலட்சத்துத் 43 ஆயிரத்து 61 திருமணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. 2021 ஆம் ஆண்டில், ஒரு இலட்சத்துத் 62 ஆயிரத்துத் 628 திருமணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## 16 பேருக்கும் பிணை

கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த 16 பேரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இன்று (19) பிணையில் விடுதலைச் செய்யப்பட்டுள்ளார். கொழும்பில் நேற்று (18) நடத்திய எதிர்ப்பு போராட்டத்தின் போதே, மேற்படி 16 பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## மைத்திரியிடம் வாக்குமூலம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது பதவிக்காலத்தில் பொதுமன்னிப்பு வழங்கிய சம்பவங்களில் ஒரு சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர். அவரிடம் 5 மணிநேரம் வாக்குமூலம் பெற்றுள்ளனர். ரோயல் பார்க் படுகொலை தொடர்பில், குற்றவாளியாக இனங்காணப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் தண்டனை அனுபவித்து வந்த ஜூட் ஜயமஹா என்பவருக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பிலேயே மைத்திரிபால சிறிசேனவிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆறு பேர் மரணம்

இலங்கையில் கொவிட் தொற்றின் காரணமாக மேலும் 6பேர் மரணமாகினர். இவர்களின் இறப்புக்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று உறுதிசெய்துள்ளார்.

# அமைச்சுப்பதவிகளுக்காக அன்றி நாட்டுக்காக ஜனாதிபதியுடன் மீண்டும் பேசத் தயார்



பயனளிக்கும் மறுசீரமைப்பு செயற்பாட்டின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரப்பிரசாதங்கள் சலுகைகளைப் பெறுவதற்குப் பதிலாக பிரயோக ரீதியாக தலையிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதே தமது நோக்கமாகும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கம் கொண்டு வரும் நேர்மறையான, முற்போக்கான முன்மொழிவுகளை ஆதரிக்கும் வகையில் ஒரு வேலைத்திட்டம் வடிவமைக்கப்படும் எனவும்,ஒருபோதும் மக்களின் எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் துரோகம் இழைக்கமாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு கையிருப்பில் எஞ்சியுள்ள டொலர்களைஅழிக்கும்செயற்பாட்டிற்கு ஒருபோதும்பங்களிக்கப்போவதில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,தற்போது அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்ப பதவிகள் 02

## மட்டுப்படுத்தப்பட்டது எரிபொருள் விநியோகம்

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய கூட்டு தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. தற்போது பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதாக தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார். நிலவும் தட்டுப்பாடு காரணமாக எரிபொருளைப் பெறுவதற்காக வாகனங்கள் இரண்டு அல்லது மூன்று நிரப்பு நிலையங்களுக்குச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். போதியளவு எரிபொருள் இருப்பதாக கூறும் அமைச்சர் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கூற்றுக்களை 02

## ஜப்பானிற்கு விஜயம் செய்கின்றார் ஜனாதிபதி

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கஅடுத்தமாதம்ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பயணத்தின் போது இருதரப்பு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன் வழங்கும் நாடுகளை அழைப்பதற்காக ஜப்பானிய பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் முதல் வெளிநாட்டு பயணமாக இரு அமைகின்றது.

## பல்கலைக்கழக அனுமதிக்கு தேசிய அடையாள அட்டை

இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேசிய அடையாள அட்டை இல்லாத, ஆனால் வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணத்தை முன்வைக்கும் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றபோதிலும்,இனிமேல் அந்த ஆவணத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதேவேளை, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### அரச உத்தியோகத்தர்களை வெளிநாடும் அனுப்பும் வேலைத்திட்டத்தை

## துரிதப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

அரச உத்தியோகத்தர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கு அனுப்பும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிப்பது, அரசு ஊழியர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு திறம்பட அனுப்பும் செயல்முறையைத் துரிதப்படுத்துவது, இதனுடன் தொடர்புள்ள நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்களை வெளிநாட்டு வேலை 02

## மேலும் 25 மில்லியன் டொலரை வழங்கும் அவுஸ்திரேலியா

மக்களுடன் என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இந்த மேலதிக உதவியை தொடர்ந்து அவுஸ்திரேலியா இதுவரை 75 மில்லியன் டொலர் உதவியை வழங்கியுள்ளது.

எங்களின் உதவி உணவு சுகாதாரம் போசாக்கு பாதுகாப்பான குடிநீர் பெண்கள் குழந்தைகள் உட்பட ஆபத்தான நிலையில் உள்ளவர்களிற்கான அவசிய உதவி போன்றவற்றை ஐநா அமைப்புகளின் ஊடாக வழங்கும் என அவுஸ்திரேலிய தெரிவித்துள்ளது.

## வரலாற்றில் மிக மோசமான சமூக பொருளாதார நெருக்கடியில் இலங்கை உள்ளது

பொருளாதார நெருக்கடியினால் கர்ப்பிணிப் பெண்கள் போஷாக்கற்ற உணவு மற்றும் உணவுத் தட்டுப்பாட்டால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என **UNFPA**–இன் நிர்வாக இயக்குனர் டாக்டர் **Natalia Kanem-I** மேற்கோள்காட்டி ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

## அமைச்சுப்பதவிகளுக்காக அன்றி நாட்டுக்காக

அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்தார். மறுசீரமைப்புகளுக்கான புத்திஜீவிகள் ஒன்றியத்தின் விசேட கூட்டம் இன்று (19) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது. தற்போது நிலவும் சூழ்நிலையில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இதன்போது இடம் பெற்றது.

## மட்டுப்படுத்தப்பட்டது எரிபொருள் விநியோகம்

அவர் நிராகரித்துள்ளார். மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டில் மக்களின் பயணத்தை குறைப்பதன் மூலம் எரிபொருள் இருப்பு கட்டுப்படுத்தப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அரச உத்தியோகத்தர்களை வெளிநாடும் அனுப்பும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

வாய்ப்புகளுக்கு அனுப்பும் முறைமையை, இலகுபடுத்தும் வகையில் 14.8.2022 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையை திருத்துவது உட்பட 6 விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பொது நிர்வாக சுற்றறிக்கையை திருத்துவதன் மூலம், பணம் அனுப்புவதற்கு, வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது ரூபாய் கணக்கைப் பயன்படுத்த அனுமதிப்பது, விதவைகள், விதுரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கு கிடைக்கும் பங்களிப்புகளுக்கு அமைய, வங்கிக்கு செலுத்த வேண்டிய தவணைகளை செலுத்துவதற்காக அந்த பணத்தை தொடர்புபடுத்தும் முறையான நடைமுறைகளை நிறுவுதல் என்பன குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

பொது நிர்வாகச் சுற்றறிக்கையை திருத்துவதன் மூலம் 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது பணத்தை அனுப்ப வாய்ப்பு காணப்படுவதோடு எமது நாட்டில் பணம் பற்று வைக்கப்படும் வகையில் அரச உத்தியோகத்தரின் பெயரில் கணக்கைத் திறக்கவோ, கூட்டுக் கணக்கைத் திறக்கவோ (துழவை யுஉஉழரவெ) அல்லது பணம் அனுப்ப கணக்கொன்றை தெரிவு செய்யவோ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் அரச ஊழியர்களுக்கு உகந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை துரிதமாகக் கண்டறிந்து, விண்ணப்பங்களை உரிய தரப்பினருக்கு அனுப்பி, சாத்தியமான வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை தொடர்ச்சியாக அடையாளம் காணவும் இலக்கு குழுக்களுக்கு அதனை முன்வைக்கவும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கல்வி வாய்ப்புகளை வழங்கும் திட்டத்தின் கீழ், அரச சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பரந்தளவில் திறம்படப் பயன்படுத்தி, வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் மூலம் வெளிநாட்டில் கல்வி கற்பதை ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், வெளிநாட்டில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவை முறைப்படுத்த, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுகளை ஓய்வூதிய திணைக்களத்தின் பயன்பாட்டுக்கு வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அரசு ஊழியர்கள் விடுமுறை பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து நிறுவனத் தலைவருக்கு அறிவுறுத்தல் மற்றும் காலக்கெடுவை வழங்குவது குறித்தும், விடுமுறை அனுமதியில் தாமதமாகும் விண்ணப்பங்களுக்காக ஒன்லைன் மேல்முறையீட்டு முறையை அறிமுகப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

விடுமுறைக்கான அனுமதி வழங்க முன்னர், விதவைகள், விதுரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புகள் மற்றும் வங்கிக் கடன்கள் என்பவற்றை திட்டமிட்டபடி பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்தும் முறைமையொன்றை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து நடைமுறைப்படுத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கு ஏற்றவகையில் அரச ஊழியர்களின் திறன்களை மேம்படுத்த, அவர்களின் பல் வகை செயல்திறனைக் கருத்தில் கொள்ளவும் வெற்றிடம் காணப்படும் துறைகளின் குறுகிய கால தேவைகளை அடையாளம் காணவும் அந்த பாடநெறிகளுக்கு அரசு ஊழியர்களை ஈடுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. அரச அதிகாரிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்பும் வேலைத்திட்டம் தொடர்பில் மீளாய்வு செய்வது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுணதீவில் மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து




வவுணதிவில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிளும் வவுணதீவு பெற்றோல் நிரப்பு நிலையத்தில் இருந்து வந்த பிரதேச சபை தவிசாளரின் டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

வவுணதீவில் இருந்து அதி வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தவிசாளரின் டிப்பர் வாகனத்துடன் மோதி உள்ளது.

மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த இருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர். இவ் இருவரும் அவசர சேவை ( 1990 ) அம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள நாவற்காடு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை வவுணதிவுப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காத்தான்குடியில் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரி கைது

காத்தான்குடி பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபாரி ஒருவரை 710 மில்லிக்கிராம் ஹரோயின் போதைப் பொருளுடன் 19 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று மாலை குறித்த பிரதேசத்திலுள்ள வீதி ஒன்றில் விசேட அதிரடிப்படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது போதை பொருளை விற்பனைக்காக எடுத்து கொண்டு சென்ற வியாபாரியை மடக்கி பிடித்த போது அவரிடமிருந்து 710 மில்லிக்கிராம் ஹரோயின் போதை பொருளை மீட்டதுடன் அவரைகைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளதுடன் இவர் அண்மையில் போதை பொருளுடன் கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்தவர் எனவும் இவர் தொடர்ச்சியாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவருபவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## புதிய திரைப்படத்தில் நடிக்கின்றார் ரஞ்சன்

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நடிகர் ரஞ்சன் ராமநாயக்க புதிய திரைப்படம் ஒன்றில் சிறப்புக் காட்சியில் நடிக்க சிறை அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர். இதை அடுத்து, அவர் கொழும்பு நகர மையத்திற்கு அழைத்து வரப்பட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழ்நாடு கடற் பகுதியில் 24 மணி நேர கண்காணிப்பு



இந்தியாவின் எல்லை பகுதியையொட்டி இலங்கை அமைந்துள்ளது. தனுஷ்கோடியில் இந்திய கடலோர காவல் படை கப்பல் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்தியாவின் எல்லை பகுதியையொட்டி இலங்கை அமைந்துள்ளது. இந்த நிலையில் சீன உளவு கப்பல் என்று கூறப்படும் '**Yuan Wang** 5' எனும் கப்பல் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை வந்தடைந்தது.

இந்தியாவின் கடும் விசனத்திற்கு மத்தியில் இந்த கப்பல் இலங்கை அரசின் அனுமதியுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை துறைமத்தில் நிறுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளள்ளது. இந்த காலக்கட்டத்தில் கப்பலில் எரிபொருள் நிரப்பும் பணி மேற்கொள்ளப்படும் என்று சீன தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கப்பல் நிபந்தனைக்கு உட்பட்டு தொலைத் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சீன கப்பல் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஒரு வாரம் நிற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் தென் இந்தியாவில் உள்ள இராணுவ நிலையங்களையும், அணுமின் நிலையங்களையும் அது கண்காணிக்கும் அபாயம் உள்ளதாக சந்தேகிக்கப்படுவதால், இந்தியா பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தி உள்ளது.

முக்கியமாக தமிழக கடலோர பகுதிகளை பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளது. ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், தனுஷ்கோடி உள்ளிட்ட ராமநாதபுரம் மாவட்ட கடல் பகுதி முழுவதும் இந்திய பாதுகாப்பு படையின் தீவிர கண்காணிப்பில் உள்ளது. தனுஷ்கோடியில் இந்திய கடலோர காவல் படை கப்பல் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தின் பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் உள்ளதால் இந்திய கடற்படை மற்றும் இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமான ஹோவர் கிராப்ட் (**hovercraft**) கப்பல் உள்ளிட்ட 8 கப்பல்களும், 2 விமானம், 3 ஹெலிகாப்டர்கள் மூலம் பாதுகாப்பு படை வீரர்கள் இடைவிடாத ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.



# மக்கள் குரல் கிராமங்கள் தோறும் முன்னெடுக்கப்படுகின்றது

( வாஸ் கூஞ்ஞ)

கௌரமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் நூறு நாட்கள் வேலை திட்டம் ஒன்றை வடக்கு– கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இணைப்பாளர் யாட்சன் பிகிராடோ இவ் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில்

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரனையில் மக்கள் குரலாக இடம்பெற்று வரும் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் இலுப்பைக்கடவையில் புதன்கிழமை (17) 17 வது நாட்களாக முன்னெடுத்துள்ளோம். தமிழ் மக்களாகிய நாங்கள் கௌரமான அரசியல் தீர்வையே முன்வைத்து இந்த நூறு நாட்கள் வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். இங்கு மக்கள் இது தொடர்பாக பலவிதமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் நாங்கள் கிராமம் கிராமமாகச் சென்று கௌரமான அரசியல் தொடர்பான கருத்துக்களை கேட்டு அறியும்போது மக்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து வருவதால் இது அரசியல் தீர்வு தொடர்பாக அரசியல் வாதிகளின் கருத்துக்கள் மாத்திரமல்ல மக்களின் அபிப்பிராயங்களும் ஐநா சபை அறிந்து கொள்ள இதுவும் ஒரு வாய்ப்பாக அமையும் என 'மெசிடோ' நிறுவன இணைப்பாளர் யாட்சன் பிகிராடோ இவ்வாறு தெரிவித்தார்.



## கிராம அலுவலகரின் கைதைத் தொடர்ந்து வீடொன்றின் மீது தாக்குதல்



(வாஸ் கூஞ்ஞ)

ஒரு கிராம அலுவலகர் கைது செய்யப்பட்டதின் எதிரொலியாக இதற்கு காரணகத்தா என தெரிவிக்கப்பட்ட ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து பொருட்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாக பொலிசில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. இவ் சம்பவம் வியாழக்கிழமை (18) மாலை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது, மன்னார் பிரதேச செயலகப் பிரிவின் நிர்வாகத்திலுள்ள ஒரு கிராமத்தில் கிராம அலுவலகர் ஒருவரை கொழும்பிலிருந்து வந்த லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் இவ் சந்தேக நபரான கிராம அலுவலகர் லஞ்சம் பெற்றதாக தெரிவித்து வியாழக்கிழமை (18) கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர். இதை கண்டித்து இவ் கிராமத்திலுள்ள ஒருசிலர் கிராம அலுவலகரின் கைதுக்கு காரணகத்தாவாக இருந்ததாக தெரிவிக்கப்படும் அவ் கிராமத்து நபரின் வீட்டுக்குள் புகுந்து வீட்டுப் பொருட்களுக்கு சேதம் விளைவித்ததாக பொலிசில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. பொலிசார் இது தொடர்பாக விசாரனையை முன்னெடுத்து வருகின்றனர்.

## பா.உ ஜனாவின் நிதி ஒதுக்கீட்டில் உபகரணங்கள் வழங்கிவைப்பு





(சுமன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா அவர்களின் 2022ம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைப்புகள் மற்றும் கழகங்கள் சிலவற்றுக்கான தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள் இன்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டது. கோரளைப்பற்று வாழைச்சேனை, மண்முனை மேற்கு வவுணதீவு, மண்முனைப் பற்று ஆரயம்பதி பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் இயங்கும் அமைப்புகள், கழகங்களுக்கான உபகரணங்களே இன்று வழங்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் அவர்களிடம் மேற்படி கழகங்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் 2022ம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் உரிய பிரதேச செயலங்களினூடாக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இருப்பினும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பிரச்சனைகள், அரசியல் குழப்பங்கள் போன்றவற்றின் காரணமாக உபகரணங்கள் கையளிக்கும் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்து தற்போது அவை உரிய அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் இன்றைய தினம் மேற்குறிப்பிட்ட மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழுள்ள அமைப்புகளுக்கு தளபாடங்கள், உபகரணங்கள் கையளிப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் ஜனா அவர்களுடன் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேசசபை உறுப்பினர்வேணுஆகியோர்கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை மாவட்டத்தில் 100 நாட்கள் செயல்முனைவு மக்கள் குரல்








வடமலை ராஜ்குமார்

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 19ஆவது நாள் போராட்டம் (19.08.2022) வெள்ளிக் கிழமை இன்று திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகபிரிவிற்குட்பட்ட இக்பால் நகர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மக்கள், கிராம பெண்கள் சிறுகுழுக்கள், பெண்கள் அமைப்பினர், இளைஞர்கள்,மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். இச் செயல்முனைவில் கலந்து கொண்டவர்கள் தங்களது போராட்டத்தினை இக்பால் நகர் கிராமத்தின் திருமலை நிலாவெளி பிரதான வீதி ஓரத்தில் நின்று தங்களுக்கான அரசியல் தீர்வு வேண்டிய போராட்டத்தினை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த போதும் உரிய அனுமதிகள் கிடைக்கப் பெறாத சூழ்நிலை ஏற்பட்டது இருந்த பொதும் இப் போராட்டத்தினை குச்சவெளி பிரதேசத்திலுள்ள இக்பால்நகர் பொது விளையாட்டு மைதான வளாகத்தில் நடாத்தப்பட்டது.

கலந்து கொண்டவர்கள் "நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்" "வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்" "13ஆவது திருத்தச்சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது" "ஒன்று கூடுவது எமது உரிமை""கருத்துச் சுதந்திரம் எங்கள் உரிமை""நடமாடும் சுதந்திரம் எங்கள் உரிமை""விரட்டாதே விரட்டாதே சிவில் அமைப்பினரை விரட்டாதே" "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்" "மத சுதந்திரத்தை தடுக்காதே" தமிழ் பேசும் அரசியல்வாதிகளே எங்கள் குரல் கேட்கவில்லையா" "தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக இணையுங்கள்" எனும் கோசங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக வந்து அமைக்கப்பட்ட கூடாரத்தில் அமர்ந்திருந்து தங்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு வேண்டும் எனும் கோரிக்கையினை தொடர்ச்சியாக ஊடகங்களுக்கும் அரசாங்கத்திற்கும் தமிழ் பேசும் அரசியல் வாதிகளுக்கும் ஒலிக்கச் செய்யும் வகையில் குரல் எழுப்பி இருந்தனர்.
இன்றைய தினம் கலந்து கொண்டவர்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் இப்பிரச்சினைகளிலிருந்து தாங்கள் விடுபடவும் சமத்துவமாக சம உரிரைமகளுடன் வாழக் கூடிய "அரசியல் தீர்வு" என்ன என்பது தொடர்பான கருத்துக்களையும் காகிதாதிகளில் எழுதிப் பொதுப் பலகையில் வெளிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முட்டை விலை குறைப்பு



முட்டை விலையை 5 ரூபாவினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முட்டை விலை குறைக்கப்படும் என அகில இலங்கை முட்டை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



# திருக்கோவில் பிரதேசத்தில் மீண்டும் இல்மனைட் அகழ்வா?

**(காரைதீவு நிருபர் சகா)**

அம்பாறை மாவட்டத்தில் தனித் தமிழர் வாழும் ,பெரிய நிலப்பரப்புடன் கூடிய திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வுக்கான நடவடிக்கைகள் மீண்டும் முடுக்கி விடப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இந்த பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு வேலைக்கு என்று கடந்த ஏழு வருடங்களாக ஒரு குறிப்பிட்ட பாரிய நிறுவனம் ( தம்சிலா நிறுவனம்) பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

இதன் போது, அப்பகுதி மக்கள் பாரிய எதிர்ப்பலைகளை வெளியிட்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதன் காரணமாக அவை நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் ,இன்று இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடியை மையமாக வைத்து அரசாங்கத்துக்கு வருவாய் சேர்க்கும் நோக்குடன் மீண்டும் அகழ்வு பணி ஆரம்பிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆரம்பத்தில் தம்பட்டை தொடக்கம் உமிரி வரைக்கும் இந்த நிகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக இருந்தது.

இருந்தாலும், சனச்செறிவு கூடிய பிரதேசங்களான தம்பட்டை தொடக்கம் விநாயகபுரம் போன்ற பகுதிகளில் இல்மனைட் அகழ்வு மேற்கொள்ள முடியாது என்று கூறப்பட்ட காரணத்தினால், தற்போது விநாயகபுரம் கோரைக்களப்பு தொடக்கம் உமிரி வரைக்குமான சுமார் 4 கிலோ மீட்டர் தூர கடலோர பகுதி இல்மனைட் அகழ்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

எனினும், அந்த பிரதேச மக்கள் தங்களது எதிர்ப்புகளை தெரிவித்த வண்ணமே இருக்கின்றார்கள். அரசஅதிகாரிகளும் அதற்கான பதில்களை தெரிவித்தவண்ணம் இருக்கின்றார்கள். இதனை ஆய்வு செய்த சுற்றுச்சூழல் அதிகார சபையும், கடலோர வளங்கள் பாதுகாப்பு திணைக்களமும் அகழ்விற்கு ஓரளவு சாதகமான பதிலை வழங்கியிருப்பதாக கூறப்படுகிறது . ஆனால் ,இந்த அறிக்கையில் மக்களுக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றது . அரசு சார்ந்து இந்த அறிக்கை வந்திருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

இன்னும் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் இதற்கு எந்த அங்கீகாரத்தையும் வழங்கவில்லை.

இதன் காரணமாக நடவடிக்கை தடைப்பட்டு வருகின்றது .அவர்களது ஒப்பமும் பெறப்பட்டால் மறுகணமே இவ் அகழ்வு ஆரம்பிக்கப்படலாம் என்று தெரியவருகிறது. உண்மையிலேயே ,இவ் அகழ்வு இடம்பெற்றால் கோரைக்களப்பு, விநாயகபுரம், பாலக்குடா ,உமிரி, சங்கமன்கிராமம், தாண்டியடி, கோமாரி ,மணல்சேனை, செல்வபுரம் ஆகிய தனித்தமிழ் ஏழைக் கிராமங்களின் 5000 குடும்பங்களுக்கு மேல் இந்த இல்மனைட் அகழ்வால் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக கூறப்படுகின்றது. இது தடுத்து நிறுத்த படாவிட்டால் விரைவில் பாரிய வெகுஜன போராட்டத்தில் ஈடுபடவிருப்பதாக மக்கள் செயற்பாட்டாளர்கள் சூளுரைத்துள்ளனர்.

# சிறுவர்களுக்கான உளசமூக செயல்திட்டம்





**ந.குகதர்சன்**

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் விழிப்பூட்டும் சிறுவர் நல வேலைத்திட்டங்களை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார இராஜாங்க அமைச்சு முன்னெடுத்துள்ளது. இதற்கமைவாக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியிலான இவ் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

"ஒரு நாளில் உன்னை மகிழ்விப்போம் " எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வு கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மதுரங்கேணிகுளம், குஞ்சங்குளம் ஆகிய கிராமங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகதருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ. குகதாசன் அவர்களின் ஒருங்கிணைப்பில் உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரனின் வழிகாட்டலில் பிரதேசசெயலாளர் க.அருணன் தலைமையில், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் அ.அழகுராஜா ஏற்பாட்டில் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது .

இந்நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வாகரை ஆதிவாசிகள் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வாழும் சிறுவர்களுகள் எதிர்நோக்கும் சவால்கள், அவர்களின் பாதுகாப்பு , சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல் , வீட்டை அடிப்படையாக கொண்ட பராமரிப்பின் முக்கியத்துவம் , திணைக்களத்தினுடைய மாற்றுப் பராமரிப்பு தேசிய கொள்கை திட்டம் , சிறுவர் பங்கேற்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு சிறுவர்களுக்கு எதிராக ஏற்படக்கூடிய சகலவிதமான துன்புறுத்தல்களையும் குறைக்கும் அல்லது தடுக்கும் வகையிலாக சமூக மட்டத்திலே கட்டமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தும் வகையில், "கிராமிய மட்ட சிறுவர் அபிவிருத்தி குழு " மற்றும் "சிறுவர் கழகங்களை " மீளமைப்புச் செய்வதும் , சிறுவர்களுக்கான படைப்பாக்க திறன் மற்றும் வாழ்க்கைத்தேர்ச்சி சம்பந்தமான பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் நூறு சிறுவர்கள் என பங்கு பெற்றிருந்தனர். அனைத்து சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டனர். இது போன்று மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து ஒவ்வொரு பிரதேச செயலகமாக சென்று அங்கு காணப்படும் பின்தங்கிய கிராமங்களில் இந் நிகழ்வை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

# அனுமதி பத்திரமின்றி மீட்கப்பட்ட 4 மாடுகள் புலன் விசாரணை முன்னெடுப்பு



அனுமதி பத்திரம் இன்றி கொண்டு செல்லபட்டு மீட்கப்பட்ட 4 மாடுகள் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் புலன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை பகுதியினூடாக மாடுகள் கடத்தப்படுவதாக பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலாலுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இரு சந்தேக நபர்களுடன் 1 எருமைமாடு உள்ளடங்கலாக 4 மாடுகள் இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

இச்சோதனை நடவடிக்கையானது கடந்த 17.08.2022 மேற்கொள்ளப்பட்டதுடன் சந்தேக நபர்களான களுவாஞ்சிக்குடி பொலிஸ் எல்லைக்குட்பட்ட போரைதீவு பகுதியை சேர்ந்த 50 மற்றும் 52 வயதுடையவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் குறித்த 4 மாடுகள் தொடர்பில் தொடர்விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் குழுவினர் மீட்கப்பட்ட மாடுகளின் உரிமையாளர்கள் தொடர்பாகவும் மீட்கப்பட்ட மாடுகள் கடத்தப்பட்டு எடுத்து வரப்பட்டனவா? என பல்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# நாம் அரசாங்கத்தின் அமைச்சு காரட் சாப்பிடுவதில்லை




ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியானது அரசாங்கம் நீட்டும் அமைச்சு கரட்டுகளை சாப்பிடத் தயாரில்லை என்றும் நாட்டுக்காக கொள்கையுடன் நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் மேற்கொள்ளும் நல்ல காரியங்களுக்கு மட்டும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் நாடாளுமன்றக் குழு அமைப்பு மூலம் மாத்திரம் ஆதரவு வழங்குவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். நாட்டில் வாழும் 220 இலட்சம் மக்கள் பெரும் சோகத்திலும், அசௌகரியத்திலும் உள்ள வேளையில், ஊடகத்துறையில் இருக்கும் ஒரு சிறு தரப்பால் போலிச் செய்திகளைத் தயாரித்து, பத்திரிகைகளிலும், மறுநாள் பத்திரிகை செய்தியை வாசிக்கும் நிகழ்ச்சிகளிலும் படித்து, மக்களுக்கு நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி பற்றிய தவறான கருத்துக்களை பகிர முயற்சிப்பதாகவும், அதனூடாக ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியினர் அதிகார மோக அரசியல் பயணத்தை மேற்கொள்வது போன்ற தவறான செய்திகளை உருவாக்குவதாகவும் அந்த செய்தி முற்றிலும் பொய்யானது எனவும் அவர் நேற்று (18) தெரிவித்தார். 1வீத சேறுபூசும் ஊடகங்கள் செய்யும் சதிகளில் மக்கள் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்றும் சிலர் காக்கைகளுடன் சேர்ந்து சதி செய்து பல்வேறு வதந்திகளை காக்கை இணையதளங்களில் நிறுவி நாட்டின் சாமானிய மக்களை தவறாக வழிநடத்துவதாகவும், நாகபாம்பு வெளிப்பட்ட போலி ஊடக பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாகை ஊடகத்திட்டத்தின் ஊடாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது களனி ரஜமஹா விகாரையையும், பௌத்த சாசனத்தையும் அற்ப அரசியல் ஏலத்தில் விட்டு அரசியல் இலாபங்களுக்காக செயற்பட்டதாகவும் எதிர்க்கட்சித்தலைவர் தெரிவித்தார். சர்வகட்சி அரசாங்கத்தின் ஊடாக சுமார் 70 அமைச்சுப் பதவிகளை கைக்கூலிகளுக்கு பகிர்ந்தளிக்கும் சூதாட்டத்தில் நாம் பங்குக்கொள்ளமாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# சந்தேக நபர் வசமிருந்து கஞ்சா மீட்பு

**பாறுக் ஷிஹான்**

பொலிஸாரினால் கைதான பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் வசமிருந்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்குகளின் அடிப்படையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரை பிடிப்பதற்காக அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர். ஜீ.துசார திலங்க ஜெயலால் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்த நிலையில் 18.08.2022 அன்று வியாழக்கிழமை கைதானார். இதன் போது நீதிமன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு நீண்டகாலமாக தலைமறைவாக இருந்த மருதமுனை வி.சி வீதியை சேர்ந்த 43 வயதான சந்தேக நபர் கைதானதுடன் வசம் 1200 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதான சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு புதிய பீடாதிபதி நியமனம்

**நூருல் /ஹுதா உமர்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் இரண்டாவது பீடாதிபதியாக பேராசிரியர் எம்.ஏ.எல்.ஏ. ஹலீம் ஏகமனதாக தெரிவானார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் தலைமையில் பொறியியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (18.08.2022) இடம்பெற்ற விஷேட ஒன்றுகூடலின்போதே பேராசிரியர் ஹலீம் பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.



இவர் கல்முனையைச் சேர்ந்த பாடசாலை அதிபர் மறைந்த மொஹமட் அப்துல் லத்தீப் மற்றும் கதீஜா உம்மா ஆகியோரின் மூன்றாவது மகனாவார். பேராசிரியர் ஹலீம் கல்முனை சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 1 முதல் 10 வரை (1970–1980) பயின்றார். அம்பாறை மத்திய கல்லூரியில் (தற்போது அம்பாறை டி.எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை) தரம் 11–12 கல்வியைத் தொடர்ந்தார். கணிதத் துறையில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் துறைக்கு தெரிவுசெய்யப்பட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் சிறப்புப் பட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்தார். பின்னர் 1993 ஆகஸ்ட் மாதம் வரை பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் மின்னியல் மற்றும் இலத்திரனியல் துறையில் விரிவுரையாளராக இணைந்து பணியாற்றினார். பின்னர் கொங்கோங் சென்று அங்கு தனது முதுதத்துமாணிப் பட்டபின்படிப்பினையும் நிறைவுசெய்தார்.

1996 ஜுலையில் அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள பெல் ஆய்வகத்தில் ஒரு ஆய்வாளராக இணைந்து கொண்டு மொபைல் மற்றும் நிலையான வயர்லெஸ் தகவல் தொடர்புகளில் அதிநவீன ஆராய்ச்சியினை மேற்கொண்டார். பெல் ஆய்வக ஆராய்ச்சி முடிவில், அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள ஸ்டீவன்ஸ் இன்ஸ்டிடியூட் ஒப்ஃ டெக்னோலஜியில் கலாநிதிப்பட்டப் பின்படிப்பினைத்தொடர்ந்துஅதனைவெற்றிகரமாகநிறைவுசெய்தார். பின்னர் ஸ்டீவன்ஸ் இன்ஸ்டிடியூட் ஒப்ஃ டெக்னோலஜி மற்றும் நியூ ஜெர்சி இன்ஸ்டிடியூட் ஒப்ஃ டெக்னோலஜி என்பவற்றில் ஆய்வுப் பணிகளிலும் ஈடுபட்டார்.

2009–2011 காலப்பகுதியில் சவுதி அரேபியாவில் உள்ள கிங் பஹட் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அதன் பின்னர் ஹாய்ல் பல்கலைக்கழகத்தில் இணைந்து இணைப் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றார். 2016–2017 காலப்பகுதியில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து கற்பித்தல் மற்றும் பொறியியல் கற்கைகளுக்கான ஐ.ஈ.எஸ்.எல். அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டார். 2020 ஜனவரியில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் ஒரு முதன்மைப் பேராசிரியராகவும் இணைத்துக் கொள்ளப்பட்டார். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் டயலொக் எக்சியாடா தனியார் நிறுவனத்துடன் இணைந்து 5வது தலைமுறை வயர்லெஸ் கண்டுபிடிப்பு மையம் (5புஜஊ) ஒன்றினை நிறுவுவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினையும் அவர் வழங்கியுள்ளார் அதேநேரம் குறித்த மையத்துக்கு பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

2020 பெப்ரவரியில் தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் துறையிடைசார் கற்கைகள் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் 18.08.2022 ஆம் திகதி முதல் மூன்று ஆண்டுகால பதவிக்காலத்திற்கென பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 18.08.2022ஆம் திகதி இடம்பெற்ற பீடாதிபதிக்கான தெரிவில் பீட உறுப்பினர்களின் ஏகோபித்த விருப்பத்தின்பேரில் பேராசிரியர் ஹலீம் புதிய பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தனது துறையில் குறிப்பிடும்படியான ஆய்வுகளைச் செய்துள்ள பேராசிரியர் ஹலீம், அவ்வாய்வு முடிவுகளை உலகத் தரம்வாய்ந்த ஆய்வுச் சஞ்சிகைகளிலும் வெளியிட்டுள்ளார். பல தரம்வாய்ந்த நூல்களும் கட்டுரைகளும் அவரினால் வெளியிடப்பட்டுள்ளன. அவரது ஆய்வு வெளியீடுகள் ஆய்வாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்றுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் ஹலீமுக்கு முன்னர் பீடாதிபதியாக கடமையாற்றிய கலாநிதி எஸ்.எம்.ஜ/னைடீன், தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் முதல் தடவையாக 2013 முதல் 2022 வரை மூன்று முறை பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக கடமையாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் கரையோர சுத்தம் செய்யும் பணி





**ஹஸ்பர்**

சர்வமத இளையோர்களின் ஒத்துழைப்பில் நல்லிணக்கத்தினைக் கட்டியெழுப்பும் வகையில் திருகோணமலை நகரசபைக்குட்ட சமுத்திராகம கரையோர பகுதியில் கரையோரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்வு நேற்று (18) இடம் பெற்றது. விழுது நிறுவன ஏற்பாட்டில் இடம் பெற்ற இதில் "கழிவு முகாமைத்துவத்தினூடாக தொற்றுநோய்களில் பாதிப்பிலிருந்து குறைத்துக்கொள்ளவும், அருகிவரும் உயிர்ப்பல்வகைமையான மானினங்களை பாதுகாக்க ஒன்றிணைவோம் "என்ற தொனிப்பொருளில் மேற்கொள்ளப்பட்ட, மான்களை பாதுகாப்பது மானுடத்தின் பொறுப்பு போன்ற வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களும் அப் பகுதியில் இதன் போது விழிப்புணர்வூட்டப்பட்ட நிலையில் ஒட்டப்பபட்டது.

குறித்த நிகழ்வில் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி விஜயகுமார் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் போன்றோர் பங்கேற்று கழிவுமுகாமைத்துவத்தின் அவசியம் பற்றி குறிப்பிட்டதோடு இப்பணியில் ஈடுபட்ட இளையோர்களை ஊக்கப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் திருகோணமலை நகரசபையும் கழிவுகளை முகாமைசெய்யும் வகையில் இணைந்து பூரண ஒத்துழைப்பு நல்கியதோடு, அப்பகுதி இளையோர்களும் தன்னார்வத்துடன் செயற்பட முன்வந்திருந்தனர். இக்கழிவு முகாமைத்துவ முன்னெடுப்பில் குறித்த கரையோர பகுதியும் மான் இனங்கள் வாழும் பகுதியும் விசேடமாக சுத்தம் செய்யப்பட்டது.

# அவசரகால மனிதாபிமான உதவி வழங்கி வைப்பு



**நூருல் /ஹுதா உமர்**

தற்போது பொருளாதார நெருக்கடி மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள பதுளை மாவட்டத்தின் அப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தொட்டுவாகலை தோட்டக்குடியிருப்பில் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் வசதி குறைந்த 112 விதவைகள் குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் அமெரிக்க ஈகைத் தமிழ்ச் சமூகத்தினால் இன்று வழங்கி வைக்கப்பட்டது. இதில் கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம் ஆலோசகர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

இதற்காக அமெரிக்க ஈகைத் தமிழ்ச் சமூகத்தின் தலைவர் பெரியநாயகி சிவராஜ், செயலாளர் சுகதேவ் வேலாயுதம், பொருளாளர் நடனசபேசன் முருகானந்தம், பாலமுருகன் சம்பந்தம், தினேஸ் கந்தசாமி, வசந்த் வல்வில் ஓரி, விஜயகுமார் மனோகரன் மற்றும் அங்கத்தவர்கள் இணைந்து இதற்கான நிதியுதவியினை வழங்கியிருந்தனர். இதனை நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் மற்றும் ப்ரண்ஷிப் பௌண்டஷன் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# தற்போதைய கிழக்கு மாகாண ஆளுனர் பதவி விலக வேண்டும்

## தேசிய விடுதலை மக்கள் முன்னணி



**ரவ்பீக் பாயிஸ்**

கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா யகம்பதி உடனடியாக பதவி விளக வேண்டும் என தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் விசனம் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் பதவி வகித்து வரும் காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்துக்கு கிடைத்த பலன் ஒன்றுமில்லை எனவும் இந்த பதவி முழுமையாக அரசியல்ரீதியாக மக்களால் தெரிவாகும் உயர் நிலை பதவி இல்லையென்றாலும் தற்போதைய மாகாண சபை இடைநிறுத்தி இருப்பதால் மாகாண ஆட்சி சம்பந்தப்பட்ட முழு அதிகாரமும் இவரிடம் இருந்து வரும் நிலையில் இவரால் கிழக்கு மாகாணத்திற்கு கிடைத்த பலன் ஒன்று கூட கிடையாது என தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் விசனம் தெரிவித்துள்ளார்.

கிழக்குமாகாண ஆளுனராக கிழக்கை சேர்ந்த ஒரு தமிழ் பேசும் ஆளுனர் நியமிக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் கவனம் செலுத்தி வருகிறோம். இது சம்பந்தமாக எதிர்வரும் 23ஃ08 நடைபெற இருக்கும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லாத கட்சி தலைவர்களுக்கு நடைபெற இருக்கும் யாப்பு திருத்த கலந்துரையாடலின் போது எனக்கான சந்தர்ப்பம் கிடைத்தால் இது சம்பந்தமாக தெளிவாக பேச உள்ளதக தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் தெரிவித்தார்.

# இருக்கும் தொழிற்சாலைகளை விஸ்தரிப்பதே காலத்தின் தேவை

## அங்கஜன் எம்.பி.



**த.சுபேசன்**

புதிய தொழிற்சாலைகளை நிறுவதனை விட இருக்கும் தொழிற்சாலைகளை விஸ்தரித்து அதனூடாக வருமானத்தைப் பெருக்குவதே தற்போதைய காலத்தின் தேவையாக காணப்படுவதாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்–மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

17ஃ08 புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு பகுதியில் பனை சார் உற்பத்திக் கிராமத்தினை திறந்து வைத்த பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் 16சௌபாக்கியா உற்பத்திக் கிராமங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் குறித்த திட்டத்தின் கீழ் மட்டுவில் மற்றும் வரணி ஆகிய பகுதிகளில் இரண்டு உற்பத்திக் கிராமங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்த உற்பத்திக் கிராமங்களுக்கான தெரிவு நேர்முகத்தேர்வு ஊடாக இடம்பெற்றது.உற்பத்திக் கிராமங்கள் ஊடாக அதன் பயனாளிகளும்–அந்தக் கிராமமும் முன்னேற்றமடைய வேண்டும் என்பதே எமது இலக்கு.

தென்மராட்சியில் 260இலட்சம் ரூபாய் செலவில் இந்த உற்பத்திக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் தற்போதைய பெறுமதி சுமார் 400இலட்சம் ரூபாயாக காணப்படுகிறது. இந்த நிதியில் உற்பத்திக்கிராம தொழிற்சாலைகளை விஸ்தரித்து நவீன இயந்திரங்களைப் பொருத்தி அதன் தொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் இந்த நிதியில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.அத்துடன் உற்பத்திக் கிராமங்களுக்கான வீதிகளும் இந்த நிதியில் செப்பனிடப்பட்டுள்ளது. எனவே இந்த உற்பத்திக் கிராம தொழிற்சாலைகள் ஊடாக உச்ச கட்ட பயனை அதன் பயனாளிகளான கிராம மக்கள் அடைய வேண்டும். அதுவே எமது விருப்பு.

யாழ் மாவட்டத்தில் கடந்த காலத்தில் பல தொழிற்சாலைகள் காணப்பட்டன.ஆனால் யுத்தத்தின் பின் அவை மூடப்பட்டு–சில தொழிற்சாலைகள் எமது மாவட்டத்தை விட்டே வெளியே போய்விட்டன.

மறுபடியும் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதனை விட இருக்கும் தொழிற்சாலைகளை விஸ்தரித்து வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதே சிறந்தது.இதுவே உடனடி சாத்தியமாகும். அந்த வகையில் தான் சௌபாக்கியா உற்பத்திக் கிராம தொழிற்சாலைகளாக ஏற்கனவே இயங்கு நிலையில் இருந்த தொழிற்சாலைகளை தெரிவு செய்து விஸ்தரித்திருந்தோம். வரணி பனம் வடிசாலை ஊடாக வருடாந்தம் ஒரு கோடி வரை அரசாங்கத்திற்கு வரி செலுத்தப்படுகிறது.மாதாந்தம் 100கோடி வரியாகச் செலுத்தும் தனியார் தொழிற்சாலைகள் பல உள்ளன.அந்த நிலைக்கு இந்த உற்பத்தி தொழிற்சாலைகள் மாற வேண்டும். அதிகமான வரி செலுத்தும் போதே அதிக உழைப்பு இருக்கும்.நாட்டிற்கும் தற்போது அதுவே தேவையாக உள்ளது.வரணி வடிசாலை ஊடாக பனங்கள் உற்பத்தியை ஏற்றுமதி செய்து அதில் வெற்றியும் கண்டுள்ளோம். அதனை தொடர்ந்து செய்து அன்னியச்செலாவனியை ஈட்ட வேண்டும்.உங்கள் ஊடாக ஈட்டப்படுகின்ற அன்னிய செலாவனி எரிபொருள்,எரிவாயு போன்றவற்றை இறக்குமதி செய்ய நிச்சயம் கை கொடுக்கும்.

இங்கிலாந்து அரசாங்கம் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்கின்ற 80சதவிகிதமான பொருட்களுக்கு வரி விலக்கு செய்துள்ளது.இது எமது பொருட்களை ஏற்றுமதி செய்ய சிறந்த வாய்ப்பாக உள்ளது.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.